# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஒப்பனைச்சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஒத்தோபர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1984, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ; சதம் 60 தபாற் செலவு ; சதம் 60

1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஒப்பனைச்சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

[1984, ஒத்தோபர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ.—52/82
1565

**1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச்சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— **1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

"அவுடதங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் ஆட்களுக்கும் வளவுகளுக்கும் உரிமமளித்தல்.

9. (1) ஒப்பனைச்சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் ஆகியவற்றுக்கான அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின்றி ஆளெவரும் அவுடதமெதனையும் உற்பத்தி செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் ஆகாது.

(2) ஒப்பனைச்சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் ஆகியவற்றுக்கான அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின்றி, அமைச்சரின் அபிப்பிராயப்படி பொதுப்பாவனைக்குப் பாதுகாப்பானதாயுள்ளதும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான அவுடதமொன்று தவிர்ந்த அவுடதமெதனையும் ஆளெவரும் களஞ்சியப்படுத்தல், விற்றல், விநியோகித்தல், இடம் பெயர்த்தல் அல்லது விற்பனைக்காக முன்வைத்தல் ஆகாது.

(3) எவையேனும் வளவுகள், ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் ஆகியவற்றுக்கான அதிகாரியினால் உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றி, ஆளெவரும் அத்தகைய வளவுகளில் அவுடதம் எதனையும் உற்பத்தி செய்தல் அல்லது தயாரித்தல் ஆகாது.

(4) எவையேனும் வளவுகள், ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் ஆகியவற்றுக்கான அதிகாரியினால் உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றி, அமைச்சரின் அபிப்பிராயப்படி பொதுப்பாவனைக்குப் பாதுகாப்பானதாயுள்ளதும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான அவுடதமொன்று தவிர்ந்த அவுடதமெதனையும், ஆளெவரும் அத்தகைய வளவுகளில் களஞ்சியப்படுத்தல் அல்லது விற்றல் ஆகாது.".

எ 077537—2,900 (06/84)

முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ, 10ஆ, 10இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 10அ, 10ஆ, 10இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஒப்பனைச்சாதனங்களை உடைமையில் வைத்திருத்தல் மீதான தடைவிதிப்பு.

10அ. அமைச்சரின் அபிப்பிராயப்படி பாவனையாளரின் சுகாதாரத்துக்கு ஊறுவிளைவிப்பதும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான ஒப்பனைச்சாதனம் எதனையும் 'எ' என்னும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆட்கள் தவிர்ந்த ஆளெவரும் பெறுதல் அல்லது தனதுடைமையில் வைத்திருத்தல் ஆகாது.

உபாயங்களை உடைமையில் வைத்திருத்தல் மீதான தடைவிதிப்பு.

10ஆ. அமைச்சரின் அபிப்பிராயப்படி பொதுப் பாவனைக்குப் பாதுகாப்பானதாகவிராததும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் உபாயத்தை 'எ' என்னும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆட்கள் தவிர்ந்த ஆளெவரும் பெறுதல் அல்லது தனதுடைமையில் வைத்திருத்தல் ஆகாது.

அவுடதங்களை உடைமையில் வைத்திருத்தல் மீதான தடைவிதிப்பு.

10இ. அமைச்சரின் அபிப்பிராயப்படி பொதுப் பாவனைக்குப் பாதுகாப்பானதாகவிராததும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் அவுடதத்தை 'எ' என்னும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆட்கள் தவிர்ந்த ஆளெவரும், பெறுதல் அல்லது தனதுடைமையில் வைத்திருந்தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"குறித்த சில அவுடதங்களை விற்றல் முதலியவற்றின் மீதான தடைவிதிப்பு.

16. ஆளெவரும் "உ" என்னும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் அவுடதத்தை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், விற்றல், விநியோகித்தல், இடம் பெயர்த்தல், விற்பனைக்கு முன்வைத்தல் அல்லது தனதுடைமையில் வைத்திருத்தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச்சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "இலங்கை மருத்துவக் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அக்கழகத்தின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கை மருத்துவக் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அக்கழகத்தின் பிரதிநிதியொருவர் ;" என்ற சொற்களை இடுவதன் மூலம் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் "சுயாதீன மருத்துவத் தொழிலர் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக்கழகத்தின் பிரதிநிதியொருவர்." என்ற சொற்களுக்குப் பதிலாக "சுயாதீன மருத்துவத் தொழிலர் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்ட அக்கழகத்தின் பிரதிநிதியொருவர்," என்ற சொற்களை இடுவதன் மூலம்;

(இ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் :—

"(ஞ) இலங்கைப் பொது மருத்துவத் தொழிலர் கல்லூரியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக்கல்லூரியின் பிரதிநிதியொருவர்;

(ட) வைத்தியர்கள் கல்லூரியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அக்கல்லூரியின் பிரதிநிதியொருவர்; அத்துடன்

(ண) இலங்கை மகப்பேற்று மருத்துவ, பெண்நோய் மருத்துவக் கல்லூரியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அக்கல்லூரியின் பிரதிநிதியொருவர்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "(1) ஆம் உட்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங) அல்லது (ச) என்னும் பந்திகளின் கீழ்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட) அல்லது (ண) என்னும் பந்திகளின் கீழ்" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலம்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலம்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை (2) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலம்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— *முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"அவுடதங்களைப் பதிவு செய்தல்.* 20அ. (1) ஒவ்வோர் ஒப்பனைச்சாதனமும், உபாயமும், அவுடதமும் அதிகாரியிடம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரியிடம் பதிவு செய்யப்படாதுள்ள ஏதேனும் ஒப்பனைச் சாதனத்தை, உபாயத்தை அல்லது அவுடதத்தை ஆளெவரும் இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், விற்றல், விநியோகித்தல், இடம்பெயர்த்தல், விற்பனைக்கு முன் வைத்தல், விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தல் அல்லது விளம்பரப்படுத்தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஔ) ஏதேனும் ஒப்பனைச்சாதனம், உபாயம் அல்லது அவுடதம் பதிவு செய்யப்படவேண்டிய விதமும் முறையும், அத்தகைய பதிவு செய்தலுக்கு ஏற்புடையனவான நியதிகளும் நிபந்தனைகளும், அத்தகைய பதிவு செய்தலுக்கென விதிக்கப்படவேண்டிய கட்டணங்களும் அதனுடன் அத்தகைய பதிவு செய்தல் தொடர்பான வேறேதேனும் கருமமும் ;

(க) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் எந்த ஒப்பனைச்சாதனங்களும், உபாயங்களும் அவுடதங்களும் தொடர்பாகத் தவறென்று புரியப்பட்டுள்ளதோ அந்த ஒப்பனைச்சாதனங்களையும், உபாயங்களையும், அவுடதங்களையும் அழித்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

9. முதன்மைச்சட்டவாக்கத்துக்கான அட்டவணையானது, அதற்கான "ஊ" என்னும் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"அட்டவணை "எ".

(அ) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவொரு மருத்துவத் தொழிலர், பல்மருத்துவர் அல்லது வாகடர், அல்லது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்களும் தொழிலர்களும் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவொரு விலங்கு மருத்துவர் ;

(ஆ) ஒப்பனைச்சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் ஆகியவற்றுக்கான அதிகாரியினால் வழங்கப்படும் உரிமமொன்றை வைத்திருப்பவரான எவரேனும் ஆள் ;

(இ) மருத்துவத்தொழிலர் ஒருவரினால் கொடுக்கப்பட்ட மருந்துப்பட்டோலையொன்றின்மேல் அவுடதமொன்றினைப் பெற்றுக்கொண்டவரான எவரேனும் ஆள் ;

(ஈ) பதிவுசெய்யப்பட்ட ஆசுப்பத்திரி, மருந்தக நிலையம், ஆதுலர் மனை அல்லது மருத்துவ, அறுவை மருத்துவ, பல் மருத்துவ, அல்லது விலங்கு மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கின்றதான வேறு நிறுவனம் ஒன்றுக்குப் பொறுப்பாயுள்ளவரான எவரேனும் ஆள் அல்லது அத்தகைய வளவுகளினுள் அத்தகைய ஆளின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்றவரான எவரேனும் ஆள் ;

(உ) ஆய்வுகூடமொன்றிற்குப் பொறுப்பாயுள்ளவரான எவரேனும் ஆள் அல்லது எந்த ஆளின் பணிகள் அறிவியல் கல்வியை அல்லது ஆய்வினைக் கொண்டுள்ளதோ அல்லது அதனை நடாத்துவதை உள்ளடக்கியுள்ளதோ அந்த எவரேனும் ஆள் அல்லது அத்தகைய வளவுகளினுள் அத்தகைய ஆளின் அதிகாரத்தின் கீழ் செயலாற்றுகின்றவரான எவரேனும் ஆள் ;

(ஊ) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர், அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ;

(எ) மருத்துவ வழங்கல்களைக் கொண்டு செல்லும் கப்பலொன்றின் அல்லது வானூர்தி ஒன்றின் சொந்தக்காரர் அத்துடன் அத்தகைய கப்பலின் அல்லது வானூர்தியின் தலைவர் அல்லது தளகர்த்தா ;

(ஏ) அவ்வாறு கடமைகளைப் புரியும்போது எந்தப் பகிரங்க அலுவலரின் வேலை ஒப்பனைச் சாதனங்களின், உபாயங்களின் அல்லது அவுடதங்களின் கையாளுகையை உட்படுத்தியுள்ளதோ அந்தப் பகிரங்க அலுவலர்.".

**பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ;** (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.